| O.S.No. 04/2020 | PW1: திரு. சோமு த/பெ. திரு. நாகப்பன் | 28-01-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>கூடுதல் முதல் விசாரணையின் பேரில் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. வா.சா.ஆ.9 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தினை எனது தந்தை மாசிலாமணியிடம் கிரையம் பெற்றதாகும். என் தந்தை கிரையம் பெற்ற சொத்தின் சர்வே எண். 162 என்று நினைக்கிறேன். அதன் விஸ்தீரனம் 45 சென்ட் என்று நினைக்கிறேன். மேற்படி சொத்திற்கு நான்கு எல்லைகள் தெரியாது. அ.வ.எண். 56/1985 வழக்கில் மேற்படி சொத்து ஏக குடும்ப சொத்து என்று தீர்ப்பாகியது என்றால் அவ்வாறு தீர்ப்பாகவில்லை. மேற்படி சொத்துக்கள் அனைத்திலும் பிரதிவாதிகளுக்கு பாதி பாகம் உரிமை உள்ளது என்று சென்னை உயர்நீதிமன்றம் வரை வழக்கு எடுத்து செல்லப்பட்டு தீர்ப்பாகியுள்ளது என்றால் அவ்வாறு இல்லை. அ.வ.எண். 56/1985 வழக்கில் சொத்தானது ஏக குடும்ப சொத்து என்று தீர்ப்பான நிலையில் அந்த சொத்தை பொறுத்து எனது தந்தை ஆவணம் ஏற்படுத்துவதற்கு எந்தவொரு உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு ஆவணம் ஏற்படுத்தியிருந்தால் அந்த ஆவணமானது 1, 2 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.01.28 16:13:45 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**